# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC No.1173/2023 | Date: 18.11.2025 |
| Deposition of Witness for | : | பு.சா.1 | |
| Name | : | **வெங்கடாஜலம்** | |

(எதிரி ஆஜர்).

**குறுக்கு விசாரணை :-**

1) நான் 08 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் லாரி தொழில் மற்றும் ரிக் வண்டி வைத்து SCN டிரான்ஸ்போர்ட் என்ற பெயரில் தொழில் செய்து வருகிறேன், மேலும் விவசாயம் செய்து வருகிறேன். நான் வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. எனது வருட வருமானம் ரூ.10 லட்சம் முதல் ரூ.15 லட்சம் வரைக்குள் இருக்கும். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் ஆமாம். லாரி மூலமாகவும், ரிக் வண்டியின் மூலமாகவும் வரும் வருமானத்தை வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

2) நான் எனது வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் சுமார் 10-15 வருடங்களாக எனக்கு எதிரியை தெரியும். சுமார் 10 வருடமாக எனது லாரியின் ஓட்டுநராக வேலை செய்து வந்தார். எதிரி என்னிடம் எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை என்னிடம் ஓட்டுநராக வேலை செய்து வந்தார் என்றால் 1996 முதல் 2006 வரை வந்திருப்பார். எதிரி என்னிடம் பணிபுரிந்த வகையில் நம்பிக்கைக்கு உரியவர் என்றால் சரிதான்.

3) எதிரி என்ன காரணத்திற்காக வேலையை விட்டு அனுப்பினேன் என்றால் அவர் சொந்தமாக தொழில் செய்வதாக சொல்லி பணியில் இருந்து நின்றுவிட்டார். எனக்கு எந்தெந்த வங்கியில் கணக்குகள் உள்ளன என்றால் ஸ்டேட் பேங்க், திருச்செங்கோடு, KVB திருச்செங்கோடு, ஐசிஐசிஐ வங்கி, சங்ககிரி கிளையில் நடப்பு கணக்கு உள்ளது. சேமிப்பு கணக்கு எந்த வங்கியிலும் இல்லை என்றால் சரிதான். நடப்பு கணக்குகள் எனது பெயரில் உள்ளதா என்றால் ஆமாம். எனது மகனின் பெயல் மதியரசன் ஆகும். அவர் எனது டிரான்ஸ்போர்ட் தொழிலை தான் கவனித்து வருகிறார்.

4) எதிரிக்கு எந்த தேதியில் கடன் கொடுத்தேன் என்றால் கடந்த 04-08-2023ம் தேதி கொடுத்தேன். எதிரி முதன்முதலில் 04-08-2023ம் தேதி தான் என்னிடம் கடன் கேட்டாரா என்றால் இல்லை, நான் கடன் கொடுப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பு கேட்டார், எதிரி கேட்டபோது என்னிடம் போதிய பணம் இல்லாததால் நான் அன்று கொடுக்கவில்லை. நான் எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் எதிரி எனக்கு நன்கு பழக்கமானவர் என்று குறிப்பிட்டுள்ளது சரியா என்றால் சரிதான். எதிரி என்னிடம் அப்போது பணிபுரியவில்லை என்றால் சரிதான்.

5) எதிரிக்கு நான் கொடுத்த பணம் எவ்வாறு வந்தது என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் எந்த தேதியில் பணத்தை பெற்றுகொள்ளுமாறு சொன்னேன் என்றால் 04-08-2023ம் தேதி நான் எதிரியை பார்த்து பணம் தயாராக உள்ளது வந்து பணத்தை பெற்றுகொள்ளுமாறு கூறினேன். எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால்

எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். அப்போது, யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் எனது மகன் மற்றும் மனைவி இருந்தார்கள். எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் காலை சுமார் 10.00 மணிக்கு கொடுத்தேன்.

6) கடந்த 04-08-2023ம் தேதி, எதிரியை நேரில் பார்த்து தான் பணம் பெற்றுகொள்ளுமாறு கூறினேன் என்றாலும், தொலைபேசியில் எங்களுக்குள் எந்த உரையாடலும் நடைபெறவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு நான் கொடுத்த பணம் எவ்வாறு வந்தது என்று நான் நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்ய இயலுமா என்றால் அனைத்து வருமானங்களுக்கும் ஆவணங்கள் இல்லாததால் தாக்கல் செய்ய இயலாது. என்னிடம் எதிரிக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு போதிய வருமானம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு போதிய வருமானம் இல்லாததால் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்று சொல்கிறென் என்றால் சரியல்ல.

7) நான் செய்து வரும் ரிக் வண்டி மற்றும் லாரி தொழில் நிரந்தரமாக வருமானம் வரக்கூடிய தொழில் என்றால் சரியல்ல. நான் செய்து வரும் ரிக் வண்டி மற்றும் லாரி தொழிலுக்காக வங்கியில் கடன் வாங்கியுள்ளேன் என்றால் வாங்கி திரும்பி செலுத்தி வருகிறேன், ரிக் வண்டிக்கு பெற்ற கடனை 06 மாதங்களுக்கு முன்னர் செலுத்திவிட்டேன். என்னிடம் போதிய பணம் இல்லாததால் தான் நான் வங்கியில் கடன் பெற்று தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எதிரிக்கு கொடுத்த ரூ.8 லட்சம் தொகையை எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரொக்கமாக ரூ.200 மற்றும் ரூ.500 தாள்களாக கொடுத்தேன்.

8) நான் எதிரிக்கு கொடுத்த ரூ.8 லட்சம் தொகை மிகப்பெரிய தொகை என்றால் சரியல்ல. பொதுவாக, நான் கடன் கொடுக்கும்போது என்ன மாதிரியான ஆவணங்கள் பெறுவேன் என்றால் காசோலை கொடுத்தார். நான் எதிரியை தவிர எத்தனை நபர்களுக்கு கடன் கொடுத்துள்ளேன் என்றால் வேறு யாருக்கும் கொடுக்கவில்லை. நான் 1993 ல் இருந்து லாரி தொழில் செய்து வருகிறேன். என்னிடம் 35 நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். என்னிடம் பணிபுரியும் நபர்களில் எத்தனை நபர்களுக்கு கைமாற்று கடன் கொடுத்துள்ளேன் என்றால் யாருக்கும் கடன் கொடுக்கவில்லை.

9) நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். மேற்படி, பதில் அறிவிப்பில் எதிரி என்ன சங்கதிகளை சொன்னார் என்று படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன், பொய்யான சங்கதிகளை கூறி பதில் அறிப்பு அனுப்பினார், அதில் உள்ள சில சங்கதிகள் ஆங்கிலத்தில் இருந்ததால் எனக்கு அது புரியவில்லை. பதில் அறிவிப்பை எதிரி எனக்கு அனுப்பினாரா அல்லது வழக்கறிஞருக்கு அனுப்பினாரா என்றால் எனக்கு அனுப்பினார், வழக்கறிஞருக்கு அனுப்பினாரா என்று எனக்கு தெரியவில்லை.

10) பதில் அறிவிப்பில் வழக்கு காசோலையின் நகலை அனுப்புமாறு எதிரி சொல்லியிருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. காசோலையை எதிரி எங்கு வைத்து பூர்த்தி செய்தார் என்றால் பூர்த்தி செய்த காசோலையில் என்முன்னிலையில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தார். எதிரியிடம் எத்தனை காசோலைகள் பெற்றேன் என்றால் வழக்கு காசோலை ஒன்று தான் கொடுத்தார்.

கடன் எத்தனை முறை கொடுத்தேன் என்றால் ஒரு முறை தான் கொடுத்தேன். **(தற்போது, சாட்சி இதற்கு முன்பு பெற்ற கடனை திரும்ப செலுத்திவிட்டார் என்று சாட்சியம் அளிக்கிறார்).**

11) எதிரி என்னிடம் பணம் பெறுவதற்கு முன்பே காசோலையை நிரப்பி கொண்டு வந்தார் என்றால் சரிதான். எதிரி என்ன படித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கு காசோலையில் எந்தெந்த சங்கதிகளை எதிரி நிரப்பினார் என்றால் கையொப்பத்தை தவிர அனைத்து சங்கதிகளை அவர் நிரப்பி தான் கொண்டு வந்தார். காசோலையில் உள்ள எனது பெயரான N.M.வெங்கடாஜலம் என்ற பெயரை எதிரி நிரப்பி தான் எடுத்து வந்தார் என்றால் சரிதான். காசோலையில் குறுக்கு கோடு இல்லை என்றால் சரிதான்.

12) இதற்கு முன்பு எதிரி என்னிடம் என்ன மாதிரியான கடன் வாங்கியுள்ளார் என்றால் 2018 ம் வருடம் ரூ.7 லட்சம் ரூ.1.50/- வட்டிக்கு வாங்கியுள்ளார். மேற்படி, தொகையை எந்த வருடம் திருப்பி செலுத்தினார் என்றால் 2021 ம் வருடம் திருப்பி செலுத்தினார், அந்த தொகையை கேட்டபோது அவரது மனைவி மூலம் என்மீது ஒரு புகார் அளித்திருந்தார். மேற்சொன்ன, ரூ.7 லட்சம் தொகையை எதிரி வட்டியுடன் செலுத்திவிட்டாரா என்றால் வட்டியுடன் செலுத்திவிட்டார்.

13) 2018 ம் வருடம் ரூ.7 லட்சம் தொகைக்கு முறையாக வட்டி செலுத்திவிட்டாரா என்றால் செலுத்திவிட்டார். மேற்படி, தொகைக்கு என்ன ஆவணம் பெற்றேன் என்றால் ஆவணம் எதுவும் பெறவில்லை. நான் 2018 ம் வருடம் ரூ.7 லட்சம் தொகையை வட்டிக்கு கொடுக்கும்போது ஆவணம் பெறவில்லை என்றும், வழக்கு கைமாற்று கடன் தொகைக்கு மட்டும் காசோலையை

பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் வட்டிக்கு கடன் கொடுக்கவில்லை என்று சொல்லிவிட்டு, தற்போது வட்டிக்கு பணம் கொடுத்துள்ளதாக மாறி மாறி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

14) பொதுவாக, வட்டிக்கு பணம் கொடுக்கும்போது தான் ஆவணங்கள் பெறுவார்கள் என்றும், கைமாற்று கடன் கொடுக்கும்போது ஆவணங்கள் பெற மாட்டார்கள் என்றால் சரியல்ல. நான் 2018 ம் ஆண்டு எதிரிக்கு வட்டிக்கு பணம் கொடுத்தபோது எதிரி கொடுத்த காசோலையை வைத்து இந்த வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு ரூ.7 லட்சம் கடன் கொடுத்தபோது ஏன் எந்த ஆவணமும் பெறவில்லை என்றால் நம்பிக்கையின்பேரில் கொடுத்தேன். இந்த வழக்கு கடன் கொடுத்தபோது எதிரியின்மீது நம்பிக்கை குறைந்ததால் தான் ஆவணம் பெற்றேன் என்றால் இருக்கலாம். 2018 ம் ஆண்டு எதிரி வாங்கிய தொகையை எந்த தேதியில் கொடுத்தார் என்றால் ரூ.3 லட்சம் தொகையை 2021 ம் வருடம் மார்ச் மாதத்திலும், ஏப்ரல் மாதத்தில் ரூ.4 லட்சம் தொகையை கொடுத்தார்.

15) எதிரிக்கு எனக்கு நம்பிக்கை குறைந்ததாக சொல்லும்போது, எனக்கு வங்கியில் நடப்பு கணக்கு உள்ளதால் எதிரிக்கு ஏன் நான் வங்கியின் மூலம் பணம் அனுப்பவில்லை என்றால் என்னிடம் ரொக்கமாக பணம் இருந்ததால் கொடுத்தேன். என்மீது திருச்செங்கோடு நகர காவல் நிலையத்தில் எதிரியின் மனைவி புகார் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். எந்த தேதியில் என்னை அழைத்து போலிசார் விசாரித்தார்கள் என்றால் 12-02-2021 ம் தேதி விசாரித்தார்கள். என்ன காரணத்திற்காக போலிஸில் புகார் அளிக்கப்பட்டது என்றால் எதிரிக்கு கொடுத்த பணத்தை கேட்டு

நான் வீடு தேடி தகராறு செய்ததாக எதிரியின் மனைவி புகார் அளித்திருந்தார்.

16) புகாரின் விசாரணையில் எதிரி பணத்தை செலுத்திவிட்டதாக சொன்னதால், ஆவணம் இருந்தால் நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளுமாறு சொல்லி அனுப்பிவிட்டார்கள். எதிரி வாங்கிய கடனை திருப்பி செலுத்திய பிறகும் எதிரி பிணையமாக கொடுத்த ஆக்ஸிஸ் வங்கியின் இரண்டு காசோலைகளை திருப்பி தர மறுத்ததாக தான் எதிரி என்மீது காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த புகாருக்கு நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான்.

17) நான் சொல்வது தவறு என்றும், கடந்த 11-08-2021 ம் தேதியன்று நாமக்கல் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் எதிரி கொடுத்த புகாரின்மீது திருச்செங்கோடு நகர காவல் ஆய்வாளர் அவர்கள் அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் நான் எந்த தேதியில் ஆஜரானேன் என்றால் 2021 ம் வருடம், 08 ம் மாதம் ஆஜரானேன், தேதி ஞாபகமில்லை. மேற்படி விசாரணையில் நான் என்ன சொல்லி எழுதி கொடுத்தேன் என்றால் எனக்கும், எதிரிக்கும் Settlement முடிந்துவிட்டது என்று எழுதி கொடுத்தேன்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Sd/-S.Sathiya,<br>Judicial Magistrate No.1,<br>Sankari.

Sd/-Venkatachalam